**அக்டோபர்: 20**

## [மகதலேனா மரியாளுக்கு ஆண்டவர் தந்த முதல் தரிசனம்.ஆ]

**வாசிக்க: யோவான் 20:10-18**

மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள், அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள், ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன். இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள், அதற்குப் போதகரே என்று அர்த்தமாம். இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை, நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார். மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.





நேற்றைய தினம் அவருடைய சரீரத்தை பார்க்க பிரயாசம் எடுத்து அதிகாலை வந்த மூன்று ஸ்திரீகளுக்கும் உயிர்த்தெழுந்த சுவிசேஷத்தை முதலில் கேட்கவும், சீஷர்களுக்கும் பகிருகிற பெரும் பாக்கியத்தை அடைந்தார்கள் என்பதை தியானித்தோம். அவர்களில் ஒருவரான மகதலேனா மரியாளுக்கோ, அதிலும் விசேஷமான பாக்கியம் கிடைத்தது. ஆண்டவரே நேரடியாக தம்மை வெளிபடுத்தினார். அப்படி என்ன விசேஷம் மரியாளிடம் இருந்தது என்பதையும், இன்னொரு காரியத்தையும் இன்று பார்க்க போகிறோம்.
1) அந்த மூன்று பேரும் உயிர்த்தெழுந்த சுவிசேஷத்தை சுமந்து செல்லும்போதே மிக மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதை கேட்ட யோவான், பேதுருவும் ஓடிபோய் அவர்கள் சொன்னது உண்மையா என பாத்துவிட்டு தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள். ஆனால் மகதலேனா மரியாளோ, இரண்டாம் முறை பேதுரு, யோவானுடன் ஓடிவந்து, அவர்களோடே திரும்பி போக மனமில்லாமல் அங்கேயே ஆண்டவரின் பிரசன்னத்திற்காக தாகதாதோடு அழுது ஏங்கி கொண்டிருந்தார். அந்த தாகமே இயேசப்பாவை தரிசிக்கவைத்தது.
2) இரண்டாவது காரியம் எதிர்மறையாக இருந்தாலும், அது நமக்கு தெளிவை தரும் என நம்புகிறேன். மரியாளிடம் இயேசப்பாவே வந்து ஏன் அழுகிறாய்? யாரை தேடுகிறாய் என கேட்டபோது, அவளால் அவரை கண்டுகொள்ள முடியவில்லை. ஏனெனில் அவள் உள்ளம் துக்கத்தால் நிரம்பியிருந்தது. துக்கம் நம் கண்களை மறைத்து விடும். ஆகவே நாம் அவருடைய பிரசன்னத்திற்காக தாகத்தோடு இருந்தாலும், துக்கத்தை அனுமதித்தால் அவர் நம் அருகில் இருப்பதை அறியக் கூடாமல் நம் கண்களை துக்கம் மறைத்துவிடும். எனவே தாகத்தோடு இருங்கள்; துக்கம் வேண்டாம்.

ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே **கர்த்தருக்குள்** நிலைத்திருங்கள். **பிலிப்பியர் 4:1**

**ஜெபம்**

மகிமையான பரலோக தந்தையே,
எங்கள் உள்ளத்தில் இருக்கும் துக்கமெல்லாம் நீக்கி உங்க பிரஸன்னத்தின் மேலே தாகத்தை தாங்கப்பா.
இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

